## ஆடிப்பட்டத்திற்கு ஏற்ற “ஆடுதுறை – 50”

## 10.7.12



பாரம்பரிய நெல் ரகங்களை மட்டும்தான் இயற்கை முறையில் சாகுபடி செய்ய முடியும்.. நவீன நெல் ரகங்களுக்கு ரசாயனம் தவிர்க்க முடியாதது என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். அதனால், பெரும்பாலான இயற்கை விவசாயிகளேகூட, நவீன ரக விதைகளை இயற்கை முறையில் சாகுபடி செய்யத் தயங்குகிறார்கள். ஆனால், நவீன ரகங்களையும் இயற்கை முறையில் சிறப்பாக சாகுபடி செய்ய முடியும் என்பதை நிரூபித்துள்ளார்... நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல் பகுதியைச் சேர்ந்த இயற்கை விவசாயி மோகன் ராஜ்.

பள்ளமான பகுதிக்கேற்ற ஆடுதுறை – 50

எனக்கு மொத்தம் 7 ஏக்கர் இருக்கு. இதில் முழுக்க நெல் சாகுபடிதான். இது, பள்ளக்காலான, களிமண் பகுதி. நீண்ட வருடமாக இயற்கை முறையில்தான் நெல் சாகுபடி செய்து கொண்டிருக்கிறேன். பாரம்பரிய நெல் ரகங்கள் மட்டும் இல்லாமல்.. கோ – 48. சி.ஆர் – 1009, ஆடுதுறை – 49, பாப்பட்லா என்று நவீன நெல் ரகங்களையும்கூட முழுக்க இயற்கை முறையில்தான் சாகுபடி செய்கிறேன். அதிலும் நான் எதிர்பார்க்கும் அளவிற்கு நல்ல மகசூல் கிடைக்கிறது. அந்த நம்பிக்கையில்தான் சோதனை முயற்சியாக, ஆடுதுறை – 50 என்ற புது ரகத்தையும் சாகுபடி செய்தேன். இந்த ரகத்தை, காவிரி டெல்டா விவசாயிகளுக்க மிகப் பெரிய வரப்பிரசாதம் என்று தான் சொல்லணும். குறிப்பாக.. தண்ணீர் தேங்கும் பள்ளமான பகுதிகளுக்கு இரு ரொம்பவே உதவியாக இருக்கும். அதுமட்டுமில்ல, ஆடிப்பட்டத்திலும் இந்த ரகத்தை விதைக்கலாம். சரியாக பொங்கலுக்கு புது அரிசி கிடைக்கும். இதோட வயது 150 நான். காவிரி டெல்டா வவிசாயிகள், கிட்டத்தட்ட 30 வருடமாக, ஒரு போக சம்பாவிற்கு நீண்ட நாள் வயதுடைய சி.ஆர்.1009 ரக நெல்லில் மட்டும்தான் பயிர் செய்தாக வேண்டிய கட்டாயத்தில் இருந்தாங்க. அது மோட்டா ரகமாக இருந்ததால், குறைவான விலைதான் கிடைத்தது. அதற்கு மாற்றாக, ஆடுதுறை ஆராய்ச்சி நிலையத்தில், சி.ஆர் 1009 ...

பாப்பட்லா -5204 இந்த இரண்டு ரக நெல்லையும் ஒட்டு சேர்த்து, 'ஆடுதுறை – 50' என்ற புது ரகத்தை உருவாக்கினார்கள்.

**பூச்சி, நோய் தாக்குதல் இல்லை!**

நாகை மாவட்ட கடற்கரையோர கடைமடை பகுதிகளில் இருக்கும் பள்ளமான வயல்களில் இதோட மகசூலை ஆய்வு செய்வதற்காக.. ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள், என்னிடம் 500 கிராம் விதையைக் கொடுத்து 2009 – 2010 ம் வருடம் சாகுபடி செய்ய சொன்னாங்க. 25 சென்டில் ஒற்றை நாற்று முறையில் நடவு செய்து, இயற்கை இடுபொருட்களை மட்டுமே கொடுத்து, சாகுபடி செய்ததில் 618 கிலோ மகசூல் கிடைத்தது. அடுத்த வருடமும், ஒரு ஏக்கரில் சாதாரண முறையிலும்.. ஒரு ஏக்கரில் ஒற்றை நாற்று முறையிலும் இதே ரகத்தை சாகுபடி செய்தேன். சாதாரண முறையில் 1,817 கிலோவும், ஒற்றை நாற்று முறையில் 2 ஆயிரத்து 11 கிலோவும் மகசூலாக கிடைத்தது. 2011-2012 வருடத்திற்கான சம்பா பருவத்திலும் சாகுபடி செய்தேன். தானே புயலில், எங்க பகுதியில் இருந்த மற்ற நெல் ரகங்கள் எல்லாம் கீழ் சாய்ந்துவிட்டது. ஆனால், இந்த ஆடுதுறை – 50 ரகம் மட்டும் சாயவே இல்லை. கொஞ்சம்கூட பூச்சி, நோய் தாக்குதலும் இல்லை. கதிர் நன்றாக வாளிப்பாக, அதிக மணிகளோட இருந்தது என்று சொன்னார் மோகன்ராஜ்.

**ஒற்றை நாற்று முறைக்கு 2 கிலோ விதைநெல்!**

ஒரு ஏக்கர் நிலத்தில், ஒற்றை நாற்று முறையில் சாகுபடி செய்ய, 2 சென்ட் பரப்பில் நாற்றங்கால் அமைக்க வேண்டும். கோடை உழவு செய்து புழுதியாக்கப்பட்ட நிலத்தில் சம்பா பருவத்தின் போது.. 25 கிலோ தொழுவுரம் இட்டு சேற்றுழவு செய்து, நன்கு பழஞ்சேறான பிறகு, நாற்றாங்காலைச் சமப்படுத்தி, 2 கிலோ விதையைத் தெளிக்க வேண்டும். 6 – ம் நாள் தண்ணீர் நிறுத்தி, 2 கிலோ கலவைப் பிண்ணாக்கை (கடலை, வேம்பு, ஆமணக்கு, புங்கன் ஆகியவற்றின் பிண்ணாக்குகள் சமவிகிதத்தில் கலக்கப்பட்டது) தூளாக்கி, பகல் 12 மணிக்குத் தூவ வேண்டும். காலை மற்றும் மாலை நேரங்களில் பயிர்களில் ஈரம் இருப்பதால், அப்போது பிண்ணாக்கைத் தூவினால், அவை பயிரோடு ஒட்டிக் கொள்ளும். ஈ, கொசு, எறும்பு போன்றவைகள் மொய்ப்பதோடு, பயிர் மஞ்சள் நிறத்திற்கு மாறத் தொடங்கிவிடும். அதனால் தான் பகல் வேளையில் பிண்ணாக்கைத் தூவவேண்டும்.

**14 – ம் நாளில் நடவு!**

காலை நேரத்தில், 8 லிட்டர் தண்ணீரில், 2 லிட்டர் நாட்டு பசு மாட்டுச் சிறுநீரைக் கலந்து, அதில் 3 கிலோ வேப்பிலையைப் போட்டு ஆறு மணிநேரம் ஊற வைத்து.. நாற்றங்காலில் தெளிக்க வேண்டும். வடிகட்டிய கசடையும் ஆங்காங்கே மண்ணில் இட வேண்டும். தேவைக்கு ஏற்ப தண்ணீர் விட்டால் போதுமானது. 14 – ம் நாள் நாற்று தயார்.

அதற்கு முன்னதாகவே நடவு நிலத்தைத் தயாரிக்க வேண்டும். அதாவது.. புழுதி உழவு செய்யப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தில், 2 டன் தொழுவுரம் இட்டு, 12 கிலோ தக்கைப் பூண்டு விதைக்க வேண்டும். 49 – ம் நாள் சேற்றுழவு செய்து, மடக்கி உழ வேண்டும். பிறகு, நிலத்தைச் சமப்படுத்தி, பத்து அங்குல இடைவெளியில் ஒவ்வொரு நாற்றுகளாக நடவு செய்ய வேண்டும். நடவின் போது, 40 கிலோ கலவைப் பிண்ணாக்கைத் தூவ வேண்டும். நடவில் இருந்து 20, 36, 58 - ம் நாட்களில் 75 லிட்டர் தண்ணீரில் 5 கிலோ வேப்பம் பிண்ணாக்கைக் கலந்து, 24 மணி நேரம் ஊறிய பிறகு, தெளிந்தக் கரைசலை பயிரின் மீது தெளிக்க வேண்டும். 95 – ம் நாள், 30 கிலோ கலவைப் பிண்ணாக்கை, சுமார் 20 கிலோ மணலில் கலந்து வயலில் வீச வேண்டும். தொடர்ந்து, காய்ச்சலும் பாய்ச்சலுமாக தண்ணீர் பாய்ச்சி வர வேண்டும். நடவில் இருந்து 9, 18, 27 ம் நாட்களில் ரோட்டா வீடர் மூலம் களைகளைச் சேற்றுக்குள் அழுத்த வேண்டும். நடவில் இருந்து, 136 – ம் நாளில் அறுவடைக்கு வந்துவிடும்.

**சாதாரண நடவிற்கு 8 கிலோ விதைநெல்!**

ஒரு ஏக்கர் நிலத்தில் சாதாரண முறையிலான நடவிற்கு, 10 சென்ட் பரப்பில் நாற்றங்கால் அமைத்து, 8 கிலோ விதைநெல்லைத் தெளிக்க வேண்டும். 26 நாள் வயதான நாற்றுகளைப் பறித்து, தோராயமாக 8 அங்குல இடைவெளியில் ஒரு குத்துக்கு 2 அல்லது 3 நாற்றுகள் வீதம் நடவு செய்ய வேண்டும். 18, 28, 40 – ம் நாட்களில் களைகளைப் பறித்து, மண்ணில் போட்டு காலால் மிதிக்க வேண்டும். நடவு செய்த 124-ம் நாளுக்கு மேல் பயிர் அறுவடைக்கு வரும். இந்த ரக பயிர், பார்ப்பதற்கு சி.ஆர்-1009 போலவும், நெல்மணிகள் பாபட்டலா போல சன்னமாகவும் இருக்கும். புழுங்கல் மற்றும் பச்சை அரிசி இரண்டுக்குமே ஏற்றது இந்த ரகம்.

புயலிலும் குறையாத மகசூல்!

நிறைவாக.. மகசூல், விற்பனை விவரங்களைப் பற்றி பேசிய மோகன்ராஜ், என்னோட பயிர், அறுவடை நேரத்தில் ஒவ்வொரு கதிரும் கிட்டத்தட்ட 24 சென்டி மீட்டத் நீளத்தில் இருந்தது. ஒவ்வொரு கதிரிலும் 360 முதல் 420 நெல்மணிகள் வரைக்கும் இருந்தது. கடந்த முறை கிடைத்த 2 ஆயிரத்து 11 கிலோவையும் அரிசியாக மாற்றித்தான் விற்றேன். இந்த ரகத்தில் 66% அரிசி கிடைக்கும். 2 ஆயிரத்து 11 கிலோ நெல்லை அரைத்ததில் 1,320 கிலோ அரிசி கிடைத்தது. கிலோ 42 ரூபாய் என்று விற்பனை செய்ததில் 55 ஆயிரத்து 440 ரூபாய் கிடைத்தது. இதில் செலவு 8 ஆயிரத்து 100 ரூபாய் போக 47 ஆயிரத்து 340 ரூபாய் லாபமாக கிடைத்தது. இந்த முறை அறுவடை செய்த நெல்லை.. விதைநெல்லுக்காக நிறைய விவசாயிகள் கேட்கிறார்கள். கிலோ 26 ரூபாய்என்று விற்றுவிடலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். அரிசியாகவோ, விதைநெல்லாகவோ விற்பனை செய்யாமல், கொள்முதல் மையத்தில் விற்றாலும் கூட கிலோவிற்கு 11 ரூபாய் விலை என்று 1,920 கிலோவிற்கு 21 ஆயிரத்து 120 ரூபாய் கிடைக்கும்.

இதில் எல்லா செலவும் சேர்த்து 8 ஆயிரத்து 100 ரூபாய் போக, 13 ஆயிரத்து 20 ரூபாய் லாபமாக

கிடைக்கும். இது நல்ல சன்னரகமாக இருப்பதனால் தனியார் வியாபாரிகளிடம் இன்னும் அதிக விலைக்கு விற்று கூடுதல் லாபம் பார்க்க முடியும் என்றார்.

**தொடர்புக்கு**

**மோகன்ராஜ், செல்போன் : 94430 14897.**